PP17995/02/2013 (033542)

# தமிழ் மலர்

Established 1960

உண்மையின் உரைகல்

TAMIL MALAR DAILY

29.12.2023 வெள்ளிக்கிழமை • திருவள்ளுவர் ஆண்டு 2054 • சோபகிருது ஆண்டு / மார்கழி 13 • ஹிஜ்ரி 1445 ஜமாதுல் ஆஹிர் - 15 • மலர் 11 இதழ் 117 RM 1.70

‘ மலர் டிவி ’
QR CODE

‘தமிழ் மலர்’ நாளிதழின் ‘மலர் டிவி’ செய்திகளை உங்கள் போனில் பார்த்துத் தெரிந்துகொள்ள இந்த QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்!

www.tamilmalar.com.my | tamilmalar2016@gmail.com | Tamil Malar Daily | @Tamilmalardaily | YouTube Malar TV | @MyTamilmalar | 03-4044 9999

பக்கம் 2 ஊராட்சித் தேர்தல் நடத்தப்படாது...

பக்கம் 6 மகிமை தரும் மார்கழி மாதம்...

பக்கம் 7 பிரதமர் மோடிக்கு ரஷியா அழைப்பு...

பக்கம் 14 கால்பந்து நாயகன் ஷஹாருதீன் மறைவு...



# டாக்டர் மகாதீரின் பிள்ளைகளை முதலில் விசாரிக்க வேண்டும்

கோலாலம்பூர், டிச. 29–
“துன்” பட்டங்களை வைத்திருப்போர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமது விடுத்துள்ள கோரிக்கை பற்றி நேற்று கருத்துரைத்த பிரதமர் அன்வாரின் மூத்த அரசியல் செயலாளர் டத்தோஸ்ரீ ஷம்சுல் இஸ்கண்டார் ஆக்கின், டாக்டர் மகாதீரின் பிள்ளைகளிடமிருந்துதான் அந்த விசாரணையை முதலில் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

டாக்டர் மகாதீருக்குச் சம்பந்தமுள்ளது என கருதப்படும் பெர்வாஜா ஸ்டில், பக்குன் நீர்மின்நிலையத் திட்டம், கிள்ளான் துறைமுக சுதந்திர வர்த்தக மண்டலம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்தும் மலேசிய லஞ்சஊழல் ஒழிப்பு ஆணையம் (எம்ஏசிசி) விசாரணை நடத்த வேண்டும் என்று ஷம்சுல் குறிப்பிட்டார்.

டாக்டர் மகாதீரின் பிள்ளைகள் எவ்வளவு பெரிய பணக்காரர்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரியும்.

பக்கம் 13

# கிளந்தான் வெள்ளப் பேரிடர்: முதல் கட்ட உதவித்தொகையாக 5 கோடி வெள்ளி வழங்கப்படும்



பாசிர் மாஸ், டிச. 29–
கிளந்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்கட்ட உதவித் தொகையாக ஐந்து கோடி வெள்ளி வழங்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று அறிவித்தார்.

பக்கம் 13



## சிறப்பு ஷரியா சட்டக் குழுவில் முஸ்லிம் அல்லாத நிபுணர்களும் இடம்பெற்றிருக்க வேண்டும்

கோலாலம்பூர், டிச. 29–
ஷரியா சட்டங்கள் மற்றும் கூட்டரசு அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு இடையே நிலவும் முரண்பாடுகளை ஆராய்வதற்கான சட்டக் குழுவில் முஸ்லிம் அல்லாத அரசமைப்புச் சட்ட நிபுணர்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று பெருவாஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஙே கூ ஹாம் நேற்று வலியுறுத்தினார்.

அந்த சிறப்புக் குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நவம்பர் 21ஆம் தேதியன்று மக்களவையில் அறிவித்திருந்தார்.

பக்கம் 13



## குடும்பத்தினரிடம் எம்ஏசிசி விசாரணை: அது அரசியல் களையெடுப்பு டாய்ம் ஸைனுடின் சாடல்



கோலாலம்பூர், டிச. 29–
மலேசிய லஞ்சஊழல் ஒழிப்பு ஆணையம் (எம்ஏசிசி) தம்மீதும் தம்முடைய குடும்பத்தினர் மீதும் நடத்திவரும் புலன்விசாரணை ஓர் அரசியல் களையெடுப்பாகும் என்று முன்னாள் நிதியமைச்சர் துன் டாய்ம் ஸைனுடின் நேற்று சாடினார்.

என்மீதும் என்னுடைய குடும்பத்தினர் மீதும் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கொண்டிருக்கும் விரோத உணர்வை இது வெளிப்படுத்துகிறது. இதுவோர் அரசியல் களையெடுப்பைத் தவிர வேறொன்றுமல்ல என்று அறிக்கையொன்றின்வழி அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் அண்மையில் அம்பலமான பிறகு அது பற்றி அவர் கருத்துரைத்திருப்பது இதுவே முதன்முறையாகும்.

“நான் செய்த குற்றம் என்ன என்பதை எம்ஏசிசி தலைவர் டான்ஸ்ரீ அஸாம் பாக்கி இதுவரை என்னிடம் தெரிவிக்கவில்லை. அரசாங்கத்தின் முன்னாள் உறுப்பினர் எனும் வகையிலும் விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் இதுவரை நான் மௌனம் காத்து வந்தேன்” என்றார் டாய்ம்.

பக்கம் 13

## அரசு மரியாதையுடன் நல்லடக்கம் - ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, டிச. 29–
நேற்று உடல்நிலை சீரற்ற நிலையில், மியாட் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்துக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப் பட்டது. ஏற்கெனவே நுரையீரல் தொற்று இருந்த நிலையில், அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்தது.

அதனால் அவருக்கு வென்ட்டிலேட்டர் பொருத்தி தீவிர சிகிச்சை யளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று காலை உயிரிழந்தார். விஜயகாந்தின் இறப்புக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், திரைப் பிரபலங்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

முதல்வர் ஸ்டாலின் தேமுதிக தலைவர் விஜய காந்தின் உடல் வைக்கப் பட்டிருக்கும் சாலிகிராமத்துக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.



பக்கம் 13

# கேப்டன் விஜயகாந்த் காலமானார்



சென்னை, டிச. 29–
நடிகரும் தேமுதிக நிறுவனத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று மீண்டும் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மூத்த மருத்துவர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு வந்தனர். அதில் ‘மருத்துவ பரிசோதனையில், விஜயகாந்துக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூச்சு விடுவதில் சிரமம் இருந்த தால் சுவாசக் கருவி மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், விஜயகாந்த் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த செய்தியறிந்து தொண்டர்கள் ரசிகர்கள் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கினர்.

(விரிவான செய்திகள் உள்ளே...)